# 4.5 நாம் எப்போதும் தேவனைச் சார்ந்திருக்கிறோம்

**சத்தியம்:** தம்மை விசுவாசிக்கிறவர்களிடத்திலும் தம்முடைய சித்தத்தை நிறைவேற்ற வாஞ்சையாயிருக்கிறவர்களிடத்திலும் தேவன் கிரியை செய்கிறார். எனவே நாம் தேவனிடத்தில் விசுவாசமாயிருந்து அவருடைய சித்தத்தைச் சார்ந்திருக்கக்கடவோம்.

**வேத வசனம்:** உன் சுயபுத்தியின்மேல் சாயாமல், உன் முழு இருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கையாயிருந்து, நீதி 3:5

**அறிக்கை:** நாம் செய்கிற எல்லா காரியத்திலும் நாம் எடுக்கிற எல்லா முடிவிலும் நம்மில் கிரியைச் செய்கிற தேவனையே சார்ந்து இருப்போம்

## பாடக்குறிப்புகள்

* **நாம் பலவிதமான உபத்திரவங்களைச் சந்திக்க வேண்டும்** - *லூ. 22:50-51, யோவான் 18:1-11*
* **நாம் அநேக தீர்மானங்களை எடுக்க வேண்டும்** - *நீதி 14:12*
* **உங்கள் சுயபுத்தியின் மேல் சாயாதிருங்கள்** - *நீதி 3:5*
* **தேவன் நம்மை வழிநடத்தி நமக்கு உதவி செய்கிறார்** - *ஏசாயா 55:9, 11:2*
* **தேவன் நம்மில் அதிகாரமுள்ளவராகவும் கிரியைச் செய்கிறவராகவும் இருக்கிறார்** - *பிலி. 1:6, 2:13*

## ஆர்வமூட்டும் வினாக்கள்

(ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கேள்விகளை விவாதிக்கலாம்)

- தேவனுடைய உதவிக்காக நீங்கள் ஜெபித்த சூழ்நிலைகள் எவை?
- நீதி 3:5-10 ன்படி நாம் எப்படி தேவனைச் சார்ந்திருக்க வேண்டும்?
- தேவனை சார்ந்திருப்பதினால் எப்படித் திடன் கொள்ள முடியும்?

**வேதப்பகுதி**
*யோவான் 18:1-11*

## பெரிய காரியங்களுக்காகத் தேவனைச் சார்ந்திருங்கள்

நாம் உலகத்தார் அல்ல. நம்முடைய காரியங்களை நாம் தேவனுடைய கண்ணோட்டத்தில் தான் பார்க்க வேண்டும். இதுவே அவர் குறித்திருக்கும் சரியான வேளையை நாம் விசுவாசிப்பதை உறுதிபடுத்தும். அவரிடத்தில் அன்புகூறுகிறவர்களுக்கு சகலமும் நன்மைக்கு ஏதுவாகவே நடக்கும். (ரோமர் 8:28). நம்முடைய தேவனாகிய கர்த்தர் சகலத்தையும் ஆளுகைச் செய்கிறார். இதைக் கருத்தில் கொள்ளுங்கள். கிறிஸ்துவின் பிறப்பு உலக நாட்காட்டிக்கு அடித்தளமாக அமைந்தது. அவர் கிரியை செய்யும்படிக்கு நாம் அவரை முழுமையாகச் சார்ந்திருந்தால் நாம் அவருடைய சித்தத்தை நிறைவேற்ற முடியும்.

### செயல்

**நாம் நம்முடைய சுயபுத்தியையல்ல, தேவனையே சார்ந்திருக்க அழைக்கப்பட்டிருக்கிறோம். அதானால் தான் தேவன் ஞானிகளை நமக்கு மேல் வைத்திருக்கிறார். நீங்கள் பிரச்சனைகளைச் சந்திக்கும்போது, ஜெபித்து, பின் தேவன் உங்களுக்கு மேலாக வைத்த நம்பிக்கைக்குரிய ஒருவரிடம் ஆலோசனையைப் பெற்றுக்கொள்ளுங்கள்.**

**சிந்திக்க:** சுயபுத்தியின்மேல் சாய்வது ஆபத்தானது.

______________________________

______________________________

**ஜெபம்:**

எப்போதும் கர்த்தரைச் சார்ந்திருந்து, அவர் மேல் விசுவாசமாயிருக்க உங்களைப் பெலப்படுத்தும்படி ஒரு ஜெபத்தை எழுதுங்கள்.

______________________________

______________________________